கவனிக்க.- 2024.03.15 ஆந் திகதிய 2376 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2373 - 2024 මාර්තු මස 22 වැනි සිකුරාදා - 2024.03.22
2373 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**

| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 02 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2024, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதி புதன் கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, மாச்சு மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## மாகாண சபை அறிவித்தல்

**1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் வாசிக்கப்படுகின்ற 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கமும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கத்திற்கான கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2(2) ஆம் உப பிரிவின் கீழ் விசேட கட்டளைப்படி அதிகாரத்தை அளித்தல்**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான ஏற்பாடுகள்) சட்டத்துடன் வாசிக்கப்படுகின்ற 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கமும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2(2) ஆம் பிரிவினால் எனக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் வடமேல் மாகாண சபை ஆளுநராகிய லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகிய நான், வடமேல் மாகாணத்தின் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளருக்கு உதவுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளதும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கமும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க (திருத்த) சட்டங்களினால் திருத்தப்பட்ட 1972 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்க சட்டமும் அதன் கீழ் விதிக்கப்பட்டுள்ள விதிகளின் கீழ் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிய அட்டவணையில் III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா அதிகாரமும் அட்டவணையில் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி தொடக்கம் இத்துடன் கையளிக்கின்றேன்.

லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன,
வடமேல் மாகாண ஆளுநர்.

பிரதேச சபை அலுவலகம்,
குருநாகலை,
2024, பெப்புருவரி 26.

| I ஆம் நிரல் | II ஆம் நிரல் | III ஆம் நிரல் |
|---|---|---|
| நிமத்தி தினுஷிகா பத்திரன | 2023.12.27 | கூட்டுறவுச் சங்க சட்டத்தின் 3, 5, 6, 7, 8, 9, 33, 39, 44 [44(6) தவிர்த்து] 45, 46, 48, 49, 50, 52, 53, 54, 58 [58(3) மற்றும் 58(5) தவிர்த்து], 59, 68 மற்றும் 72 ஆகிய பந்தியின் கீழ் ஆணையாளரும் பதிவாளரினால் எல்லா அதிகார விதிகளின் 4, 11, 15, 16(ii), 18, 19, 27, 32, 33, 35, 37, 39, 40, 41, 42, 48, 49 [49(xii) தவிர்த்து] 51, 52 மற்றும் 53 இற்கான விதிகளின் கீழ் மற்றும் பதிவாளர் அவர்களின் அனைத்து அதிகாரங்களும். |

03 - 365

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.